# UDUVIL REMEMBERS SARASWATHY

Miss Jebamani Jesusahayam who was a teacher under Mrs. Saraswathy Somasundram gave a glowing tribute to the life and witness of Mrs. Somasundram at the Memorial Service held at Uduvil Church on 10th of August 199 .

We give below excerpts from her speech.

It has been wisely said 'example is better than precept' Mrs. Somasundram was a lady of few word, but she gave dynamic leadership by her actions.

She was greatly attached to Uduvil Girls' College. She would often say that the Institution was built by the great sacrifice of the American Missionaries. Their vision for Uduvil can be fufilled only i. we dedicate ourselves for the service of Uduvil.

Saraswathy was a woman of prayer. Whenever. I went to her with problems of the hostel - girls she would say try to solve it by prayer. Do not publicize anything

She will slip into the Chapel late in the night and pray to God for hours "Uduvil is hallowed ground 'I can feel God moving here' were the words she often repeated.

Ruskin said that the first test of a truly great man is his humility. Mrs. Somasundram did not lose her head anytime because of her family connections, educational attainments or accomplishments: She had much love for the poor, shy and reserved children and tried to bring them, out of their shells. I found her to be a lady of intergrity. She did not fear anyone because she feared God.

She had the courage to stand alone when it was necessary. She would tell us take time to make a decision, do not change it.

The following are some of the achievements during her tenure as Principal -

1. Typing and Short hand Classes commenced in 1971.
2. The School hall was renovated in 1974.
3. The library was redesigned to develop reading habit among students in 1975
4. Music Academy was inaugurtaed in 1979
5. Hudson Parasamy Memorial hostel was constructed in 1981


# THE MORNING STAR

Registered as a Newspaper (Established 1841) published Every Friday

Vol 159 Jaffna Friday 27 th August 1999 No. 17

*RICHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE*


# Ashram at 60



**Phillip Annai**

Expect great things from God
Attempt great things for God

It is indeed a great pleasure for me to write my reminiscence at the 60th Anniversary of the Christa Seva Ashram I have a very vivid recollection of the opening Service held on August 21st 1939. I had the chance of attending this service with the St. John's College S. C. M. group. On this day my father presented a woollen carpet to the Ashram chapel, brought from Andhra Pradesh. From that time onwards, I was closely attached with the Ashram and was present at most of the functions held here.

Since Rev. Selvaratnam was a great figure in the Christian community, Bishop Kulandran after Selvaratnam's death had written a biography of his life & work. I also had the privilege of writing his biography

**By D R A**

and the History of the Ashram till 1999, in Tamil

Rev. Selvaratnam (Peri Annan) had the opportunity of meeting Dr. S. Jesudasan Co - Founder of the Christukula Ashram at Tirupattur, in 1924 Jesudasan, being the moving spirit behind the Indian Christian Ashram movement - had planted the idea of Christian Ahsram, in Selvaratnam's mind - A call had sounded; and a vision seen!

After this, Peri Annan and his friend D. T Niles prayed together seeking God's will.

(Cond. Page 4)

## APPOINTED J. P.

Mr. S Satkunasingham, former Regional Senior Engineering Assistant, Dept. of Agriculture, has been appointed a Justice of the Peace by Prof. G. L Peiris - Minister of Justice, Constitutional Affairs and National Integration. He took his oaths before Acting District Judge of Jaffna Mr. K Kesavan. He is the Secretary of C S. I. Church Chavakachcheri, Secretary, Y. M. C. A. Former Secretary, Thenmaradchy Pensioners Association presently Patron and and member of the District Hospital Advisory Society, Chavakachcheri.

He is an old boy of Union College, Tellipallai. He has taken a good deal of interest in the extra - curricular activities of the school particularly in Sports. He was the House Captain, and Students Counsellor and represented the College in Track and Field Athletics for several seasons and a good sprinter. He captained the team in 1952 and 1953 ad won many places at the Jaffna Inter - Collegiate Sportsmeet and also represented at the All Ceylon Public Schools Sportsmeet. He was awarded Athletics colours in 1953. He also played football for the college.

He is the youngest son of the late Mr J C Sabaratnam, Rtd. Teacher, Union College and Mrs R N Sabaratnam. He is the youngest brother of the late Mr. S J Ratnasingham, a distinguished old student of Jaffna College, and former deputy director of Social Services, he serrved. UNICEF UNO. Nirobi, Kenya Board ofDirectors Jaffna College Sister Dr (Mrs) Pearl Yogarajah, was former D. M. O Chankanai and Green Memorial Hospital Manipay.

He is the grandson of the late J K Chinnathamby (brother - in - law of late Rev S. R. Hitchcock and Rev. V. M. John) and Mrs Mary Chinnathamby of Post Office Road, Chavakachcheri. His wife Mrs Loji Satkunasingham is the Head Mistress of C S I Nursery School and Satkunasinghams have three sons.

## *Paul Harrison Award*

The 'Morning Star' congratulates Dr. (Mrs.) C- Ambalavanar on gaining the Paul Harrison Award given by the Christian Medical College, Vellore.

This is the most prestigious award given to old. students of the CMC who have served for long time under very difficult circumstances.



Dr. (Mrs) C. Ambalavanar will be receiveing this award at the General Convocation scheduled to take place in October 1999.

**உதயதாரகை**

3 27 - 08 - 1999

## தாரகை ஒளி

சிற்றின்ப பிரியன் தரித்திரனாவான் மதுபானத்தையும் எண்ணெயையும் விரும்புகிறவன் ஐசுவரியவானாவதில்லை.

நீதிமொழிகள் 21 : 17

## ஆச்சிரமத்தின் எதிர்காலம்

இம் மாதம் 21 ம் திகதி ஆச்சிரமத்தின் 60 வது நிறைவு தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. 60 வருடங்களுக்கு முன்னர் இதே தினத்திலே தான் ஆச்சிரமம் சம்பிரதாய பூர்வமாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. 1940 களிலும் 1950 களிலும் இது ஆல் போல் பருத்து அறுகு போல் படர்ந்தது.

1960 களிலும் ஒரளவிற்கு ஆச்சிரமம் சிறப்புடன் இயங்கி வந்தது. ஆனால் 1970 களிற் அது பல பிரச்சனைகளை எதிர் கொள்ள வேண்டியிருந்தது. 1971 இல் சின்னண்ணனும், 1973 இல் பெரியண்ணனும், திரைக்கு அப்பாற் சென்று விட்டனர்.

தொண்டர்களை புதிது புதிதாக வந்து சேர்ந்து குறைந்தது. 1960 களில் பாடசாலைகளை அரசினர் சுவீகரித்தபடியினால் கிறிஸ்தவ திருச்சபையினுடைய பலம் பெருமளவிற் குறைந்தது. 1983 ற்கு பிறகு கிறிஸ்தவர்கள் பெருமளவினராக பிற நாடுகளுக்கு புலம் பெயர்ந்தனர் ஆச்சிரமத்தின் நண்பர்களில் இப்போது வெகு சிலரே குடாநாட்டில் இருக்கின்றனர். ஆகையினாலேயே கிறிஸ்துவின் அடியார்கள் ஆச்சிரமத்தின் வருங்காலத்தை நினைத்துக் கவலைப்படாமல் இருக்கமுடியாது.

ஆச்சிரமம் இலங்கையின் திருச்சபை வரலாற்றில் ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். உலகெங்கிலும் திருச்சபைப் பணிக்கு பக்தர்கள், பிரமச்சாரிய விரதத்தை அனுஷ்டித்தனர். கத்தோலிக்க திருச்சபையில், திருமண வாழ்வை மறுத்து சம்பூரணமாக கிறிஸ்துவின் சேவைக்கு தம்மை அர்ப்பணித்தவர்கள் ஆயிரமாயிரம்.

தென்னிந்தியாவில் கூட புரட்டஸ்தாந்துசபைகளில் பலர் கிறிஸ்துவுக்காக இல்லறவாழ்வையே மறுத்தனர். இவ்விஷயத்திலே யாழ்ப்பாண கிறிஸ்தவ சபை "மலடி" இல்லை என்பதனை உலகுக்கு அறிவிப்பதாக ஆச்சிரம தொண்டர்கள் துறவறத்தை மேற் கொண்டனர். அந்த வகையில் யாழ்ப்பாண திருச்சபைக்கு பெரும் புகழ் சேர்த்துக் கொடுத்தவர்கள் ஆச்சிரம தொண்டர்கள் என்பது மறுக்கவோ, மறைக்கவோ முடியாத உண்மையாகும். பெரியண்ணன் செல்வரத்தினதிற்கும் சின்னண்ணன் இயேசு சகாயத்திற்கும் சாமண்ணன் சாம் அல்பிரட்டுக்கும் யாழ்ப்பாண சமுதாயம் மிகவும் கடமைப் பட்டுள்ளது.

ஆச்சிரமம் உலகப்பாரத் தால் நொந்துத். சோர்ந்தவர்களுக்கு எல்லாம் ஆறுதல் அளிக்கும் இடமாகவும் திகழ்ந்தது. பெரியண்ணனின் பொறுமையும், சின்னண்ணன் பக்தியும், சாம் அண்ணனின் உழைப்பும் ஆச்சிரமத்தை ஒரு பாலைவன பசுஞ்சோலையாக ஆக்கி விட்டிருந்தன, ஆச்சிரமம் யாழ்ப்பாணத்திலே திருச்சபை ஒருமைப்பாட்டை வளர்க்கின்ற ஒரு சிறந்த கருவியாகவும் விளங்கியது. தென்னிந்திய திருச்சபை மெதடிஸ்த, அங்கிலிக்கன் சபையினர் மகிழ்ச்சியுடனும் ஆர்வத்துடனும் இசைவுடைய கூட்டங்களிலே வந்து கலந்து கொண்டார்கள். இங்கு கூட்டங்கள் எல்லா திருச்சபை பிரிவினர்களினாலும் நடாத்தப்பட்டன. ஆச்சிரம தொண்டர்கள் எல்லா சபையினராலும் நன்கு விரும்பப்பட்டும் மதிக்கப்பட்டும் வந்தர்கள்.

யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவத்தை சுதேச நிலைப்படுத்துவதிலும் ஆச்சிரமம் அரும் பணியாற்றியது. தாவர உணவு இந்து சந்நியாசிகளுக்குரிய உடை, தமிழ் மக்களுக்கு ஏற்ற இயல்பான வழிபாட்டு முறைகள். என்பன இந்துக்களையும் இந்த இடத்தை விரும்பும் படி செய்தன. பல இந்துக்கள் பெரியண்ணனை தமது சற்குருவாக கருதினார்கள்.

எனவே ஆச்சிரமம் யாழ்ப்பாண திருச்சபை வரலாற்றில் ஒரு முக்கியமான நிறுவனம் என்பதை எல்லோருமே ஏற்றுக் கொள்வார்கள் முப்பெரும் தலைவர்களில் ஒருவராகிய சாம் அண்ணன் தமது இறுதி கால கட்டத்தில் தனக்கு பின் ஆச்சிரமத்துக்கு யார்? என்பதனைக் குறித்து அதிகமாக வேதனைப்பட்டார். அவர் தமக்குப் பின்னரும் ஆச்சிரமம் ஒழுங்காக நடைபெற வேண்டும் என்றே பிரையாசப்பட்டார். தான் கண் மூடுவதற்கு முன்னர் வாலிபர் ஒருவர் பிரமச்சாரிய வாழ்வை மேற் கொண்டு ஆச்சிரமத்திலே சேர வேண்டும் என விரும்பினார்.

ஆச்சிரமத்தின் வருங்காலத்தைக் குறித்து அதன் நண்பர்கள் வருந்திக் கொண்டு இருக்கும் போது மட்டக்களப்பில் இருந்து பிலிப்பண்ணன் அதன் பொறுப்பை ஏற்க வந்து சேர்ந்தார், ஆச்சிரமம் இறைவனாலே ஆரம்பிக்கப்பட்டது. அதனுடைய தேவைகளையும், நோக்கங்களையும், ஆண்டவர் அறிவார். மோசேக்குப் பின்னர் யோசுவாவை எழுப்பிய இறைவன் ஆச்சிரமத்துக்கு ஒரு தலைவனை கொடுக்காமல் விடமாட்டார். ஆகவே பிலிப்பண்ணன் ஆச்சிரமத்தின் சிறந்த தலைவராக மலருவார், என்று நாம் திடமாக நம்பலாம். அவர்களுக்காக பிரார்த்தனை செய்வதே ஆச்சிரமத்தின் நண்பர்கள் செய்ய வேண்டிய பணியாகும்

# 60 ஆண்டு நிறைவைக் காணும் ஆச்சிரமம்

## முப்பெருந் தலைவர்கள் இன்றி முதன் முறையாக நடக்கின்றது!


மருதனார் மடத்தில் உள்ள கிறிஸ்தவ சேவ ஆச்சிரமத்திற்கு 60 வயது பூர்த்தி ஆகின்றது. இந்த வருடந்தான் முதன் முறையாக கிறிஸ்தவசேவ ஆச்சிரமத்தின் முப்பெரும் தலைவர்கள் இல்லாத நிலையில் இதன் ஆண்டு நிறைவு விழா நடைபெற இருக்கின்றது. இப்போது புதிதாக ஆச்சிரமத்தில் இருக்கும் பிலிப் அண்ணனையும் ஆச்சிரமத்தின் முக்கியமான நண்பர்களையும் உலகெங்கணும் உள்ள திருச்சபையார்



பெரியண்ணன்

ஆவலோடு பார்த்துக்கொண்டிருக்கின்றனர். வண. D.R. அம்பலவாணர். திரு ஆ. ராஜசிங்கம், திரு வேதநாயகம் சில்வா, ஆகியோரையும். மெதடிஸ்த, அங்கிலிக்கன், தென்னிந்திய திருச்சபை தலைவர்களையும் கிறிஸ்தவ மக்கள் உன்னிப்பாக கவனித்து கொண்டு இருக்கின்றனர்.

கிறிஸ்தவ.சேவ ஆச்சிரமம்1939ம் ஆண்டு மிகுந்த உற்சாகத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. 1962ம் ஆண்டு வெளியிடப்பட்ட ஆச்சிரமத்தின் வெள்ளி விழா மலரில் மிடில்றன வீவர் என்ற மெதடிஸ்த மிஷனரி ஆச்சிர முயற்சிக்கு பின் வருவோர் பலத்த ஆதரவு கொடுத்தார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.



சின்னன்னன்

திரு W D நைல்ஸ்
வண டாக்டர் D T நைல்ஸ்
வண R C P வெல்ச்
வண J A R நவரத்தினம்
வண ச குலேந்திரன்
செல்வி ஓாஜ புக்வால்டர்
வண E மிடில்ரன் வீவர்

ஆரம்பத்தில் இருந்தே ஆச்சிரமம் திக்கற்றவர்களுக்கும் பாரம் சுமந்தவர்களுக்கும் வருத்தப்படுபவர்களுக்கும் சிறந்த உறைவிடமாக விளங்கி வந்தது. ஆச்சிரமத்தின் முக்கியமான மைற்கற்கள் பின்வருமாறு.

1 1924 ம் ஆண்டு வண எஸ் செல்வரத்தினம் திருப்பத்தூர் கிறிஸ்து குல ஆச்சிரம ஸ்தாபகர் டாக்டர் சவரிராயன் இயேசுதாசனைச் சந்தித்தல்.

2 1939 ஜனவரி மாதம் 9 ம் திகதி ஆச்சிரமத்தின் ஜெபாலயத்திற்கு அனைத்துலக சபை மன்றத்தின் செயலதிபர் டாக்டர் விஸ்சறிகூல்ற் அடிக்கல் நாட்டினார்.

3 1939 ம் ஆண்டு மே மாதம் செல்வரத்தினம் சபை ஊழியத்தின்று தம்மை விடுவித்துக் கொண்டு ஆச்சிரமத்தின் பொறுப்பை ஏற்றார்.

4 1939 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21 ம் திகதி திறப்பு விழா சிறப்பாக நடைபெற்றது. இந்தியாவுள்ள திருப்தூர் ஆச்சிரம தொண்டர்கள் வருகை தந்தனர்.

5 1940 ம் ஆண்டு டிசம்பர் 12 ம் திகதி செபாலயம் பிரதிஷ்டை செய்யப்பட்டது.



சாம் அண்ணன்

6 1941 ம் ஆண்டு கிறிஸ்தவ பெண்கள் நிலையம் மருதனார். மடத்தில் அமைக்கப் பட்டது.

7 1944 ம் ஆண்டு சின்னண்ணன் I. T. இயேசு சகாயம் ஆச்சிரமத்தில் ஒரு தொண்டனாகச் சேர்ந்து கொண்டார்.

8 1944 ம் ஆண்டு கிழக்கு மாகாணத்தில் கிரான் என்ற இடத்தில் ஓர் ஆச்சிரமம் நிறுவப் பட்டது.

9 1948 ம் ஆண்டு மே மாதம் 24 ம் திகதி சாம் தேவரத்தினம் அல்பிரட் (சாம் அண்ணன் ) ஆச்சிரமத்தின் தொண்டரானார்.

10 1949 ம் ஆண்டு 10 ம் ஆண்டு நிறைவு விழாகொண்டாடப் பட்டது.

11 1962 ம் ஆண்டு சின்னண்ணன் இயேசு சகாயமும் சாம் அண்ணனும் தென் இந்திய திருச்சபை குருமாராக அபிசேகம் செய்யப்பட்டனர்.

12 1970 ஆண்டு மார்ச் 31 சின்னண்ணன் இயேசு சகாயம் மறைவு.

(2ம் பக்கம் பார்க்க)

எஸ். ஜே. எழுவது

## மெல்லோ பாதிரியார் நினைவு

ஆகஸ்ட் மாதம் 10 திகதி மெல்லோப் பாதிரியார் நினைவு தினமாகும். கி பி 1658 ம் ஆண்டு தொடக்கம் 1796 வரை ஒல்லாதர் இலங்கையின் கரையோரப் பகுதிகளை ஆட்சி செய்தனர். அவர்கள் தமது மதமாகிய டச்சு சீர்திருந்திய சபையை இலங்கை எங்கணும் பரப்பினார்கள். அவர்களுடைய சமய பிரச்சார முயற்சியினால் திருச்சபைக்கு கிடைத்த ஒரு முத்து என்றால்- அது ''மெல்லோ பாதிரியார் தான்'' (Philpde Melho) இவர் கொழும்பு செட்டி என்ற இனத்தைச் சோர்ந்தவர். தமிழிலே சிறந்த புலமை வாய்க்கப்பெற்றவர். இவர் ஒல்லாந்தரினாலே கொழும்பில் நிறுவப்பட்ட இறையியற் கல்லூரியில் கற்று அரங்கு ஏறினார். எபிரேய, கிரேக்க, லத்தீன், ஒல்லாந்து, போர்த்துக்கேச, தமிழ், பாஷைகளையும் கிறிஸ்தவ இறையியலையும் ஐயம் திரிபறக் கற்றார்.

இவருக்குப் புலமை பரிசு கொடுத்து, ஒல்லாந்து தேசம் அனுப்ப ஆட்சியாளர்கள். விரும்பினார்கள். ஆனால் அவரோ ஒல்லாந்து தேசத்துக்கு போக மறுத்விட்டார். 1744ம் ஆண்டு இவருக்கு பிரசங்கம் செய்ய தராதர பத்திரம் வழங்கப்பட்டது. தமிழருக்கு மட்டுமன்றி ஒல்லாந்தருக்கும் பிரசங்கம் செய்தார்' முதன் முதலாக புரட்டஸ்தாந்து திருச்சபையில் தமிழ்ப்பணி செய்தவர் மெல்லோப்பாதிரியார் ஆவார். 1750 இல் இவர் புதிய ஏற்பாடு முழுவதையும் தமிழில் மொழிபெயர்த்தார். இம் மொழி பெயர்ப்பின் முகவுரையில் 'இலங்கை மக்களில் பெரும்பாலானவர்கள் தமிழையே பேசுகின்றனர் என்று குறிப்பிட பட்டுள்ளது. இவர் தமிழராக இருந்த போதிலும் ஒல்லாந்தவர் இவரை குருவாக அபிசேஷகம் பண்ணினார்கள்.

வடமாகண திருச்சபைக்கு இவர் பொறுப்பதிகாரியாக நியமிககப்பட்டார். 1755 இல் இவர் சங்கீதங்களை மொழி பெயர்த்து 'இராச தீர்க்கதரிசியாகிய தாவீதினுடைய சில சங்கீதங்களும் வேறு சில பாட்டுகளும் எனமகுடமிட்டு வெளியிட்டார்.'

அவர் முதலாம் சங்கீதம் முதலாம் வசனத்தை பின்வருமாறு மொழி பெயர்த்தார்.

''ஆகாதவார் லொசனைவிலெ
பாவிகள வழியிலெ
நிலலாமற சாகசககாரருடைய
ஆசனததிலமார்மற
கத்தருடைய வெததிற கருத
தாய அதினைத ான
ராப பகற சிநதிபபொன
பாக்கிய வான
அதெனனெனறுவ அவனுற
நொததெ நாடடப்படதே

தறகான காலததெ தன
கனியைக கொடுத
இலைததனைசெய உதிராமல
நிறகுற தருவளைபெ பொல
வான''

இவர் சிறந்த தமிழ் கவிஞராகவும் விளங்கினார். 'மருதப்பர் குறவஞ்சி' இவர் இயற்றிய செய்யுள் நூல். மெல்லோ பாதிரியார் இயற்றிய மருதப்பர் குறவஞ்சியை நான் பலவீடுகளிலும் நாடுகளிலும் நுதானசாலைகளிலும், நூல் நிலையங்களிலும் தேடினேன். கிடைக்கவில்லை! மருதப்பர் குறவஞ்சியை தேடித் தருபவர்களுக்கு யான மிகுந்த நன்றியுடையவனாக இருப்பேன்.

## 60 வது...

13 1973 மார்ச் 29 ம் திகதி பெரியண்ணன் செல்வரத்தினம் மறைவு.

14 1999 ம் ஆண்டு ஜனவரி 26 ம் திகதி சாம் அண்ணன் மறைவு.

## 75 ஆவது பிறந்த நாள் வாழ்த்து

எமது ஆதீனத்தின் சிரேஸ்ட குருவானவராகவும் எமது இறையியல் கல்லூரியில் தொடர்ச்சியாக 16 ஆண்டுகள் விரிவுரையாளராகவும் காப்பாளராகவும் பணியாற்றி வருபவருமாகிய அருள் திரு டி ஆர் அம்பலவாணர் அவர்கள் கடந்த 05 08 1999 அன்று தன்னுடைய 75 ஆவது பிறந்த தினத்தை நன்றியுடன் கொண்டாடினார்: அன்றைய தினம் மாலை 4 00 மணிக்கு இறையியல் கல்லூரியின் மாணவர் மன்றத்தினர் ''ஆசியா இல்லத்தில்'' ஓர் நன்றி செலுத்தும் ஆராதனையை நடாத்தினார்கள்.

இவ் வாராதனையை இறையியல் கல்லூரியின் மாணவன் சிவாநந்தரூபன் தலைமையேற்று நடாத்தினார். உடுவில் திருச்சபை ஊழியன் அருள் திரு ஏ எஸ் தேவஞானாநந்தன் அவர்களுடைய தொடக்க செபத்துடன் ஆரம்பமானது இவ்ஆராதனையில் சகோ எஸ் செல்வநந்தா திருமறைப் பாடத்தை வாசித்தார். மாணவர் மன்றத்தினர் 'நான் உமக்கு சொந்தமானவன்' என்ற விசேட பாடலைப் பாடினார்கள்.



சிரேஷ்ட போதகர் பேரருட் கலாநிதி எஸ் ஜெபநேசன் அவர்கள் தன்னுடைய உரையை திருப்பாடல்கள் 27 : 13 இல் ஆற்றும் போது அருள் திரு அம்பலவாணர் போதகர் அவர்களில் தான், கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம், அதிலும் இவற்றையும் காண்பதாகவும் அவர் எமது அகிலத்தின் ஒரு பெரும் சொத்து என்றும் கூறியதுடன், இயேசுவைக் கைகளில் ஏந்திய சிமியோன் போன்று இஸ்ரவேலின் ஆறுதல் வர காத்திருக்கும் ஒருவராக அவரைத் தாம் காண்பதாகவும் கூறினார்.

அதனைத் தொடர்ந்து போதகர் அவர்கள் மொழிபெயர்த்த 'என் ஆண்டவா உம் கரங்கள் படைத்த என்ற பாடல் பாடப்பட்டது. தொடர்ந்து அம்பலவாணர் போதகர் அவர்கள் எல்லோருக்கும் நன்றி தெரிவித்து உரையாற்றியதோடு கடவுள் தம் வாழ்வில் செய்து வருகின்ற அரும் பெரும் காரியங்களையும் பகிர்ந்து கொண்டார். இறுதியில் பேராயருடைய செபத்துடனும் இறையாசியுடனும் அராதனை நிறைவு பெற்றது: வருகின்ற வருடம் போதகர் அவர்கள் தமது இறைபணியில் 50 ஆவது வருடத்தை காண இருக்கின்றார் என்பது குறிப்பிடத் தக்கது.



## வாழ்க்கையில் பல பிழைகள் விட்டு விட்டீர்களா?

### இனி என்ன செய்யலாம் என்கிறார் நோர்மன் வின்சென்ற் பீல்

வாழ்க்கை என்பது ஒரு நீண்ட பயணம். இதிலே பிழை விடாதவர்கள் ஒருவருமே இல்லை பிழைகளை விட்டுவிட்டு அதைப்பற்றியே சிந்தித்து தமது வாழ்க்கை முழுவதையுமே தோல்வி ஆக்கி விடுபவர்கள் பலர். தாம செய்த பிழைகளை மறந்து விட்டு முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து செல்பவர்கள் சிலர். வாழ்க்கையில் பிழை விட்டு விட்டால் என்ன செய்ய வேண்டும் என்று கூறுகிறார் நோர்மன் வின்சென்ற் பீல்

1 பிழை ஒன்று செய்து விட்டால் தோல்வி மனப்பான்மையைத் தழுவி கொள்ளாதீர்கள். ஒரு பிழையுடன் வாழ்க்கையே முடிந்து விட்டது என்று எண்ணிவிடாதீர்கள்.

2 நீங்கள் இழைத்து விட்ட தவறின் காரணத்தை ஆராய்ந்து ஆராய்ந்து பாருங்கள். அந்த பிழையினால் நீங்கள் கற்றுக் கொண்டபாடங்களை நன்றாக மனதில் பதித்துக் கொள்ளுங்கள். புதிய அணுகு முறையை வகுத்துக்கொள்ளுங்கள்.

3 நீங்கள் பிழை விடுவதற்கான உங்கள் மனோநிலை அல்லது உளவியல் என்பதில் உள்ள குறைபாடுகளை எண்ணிப் பாருங்கள்.

4 உங்களது ஆன்மீக அனுபவத்தை வளர்த்து கொள்ளுங்கள். ஆன்மீக உணர்வு வளரும் போது மனதிலே உள்ள பிழை விடும் குணம் மறைந்துவிடும், விசுவாசமும் செபமும் சரியானதைச் செய்ய உங்களுக்கு வழிகாட்டும்.

5 செய்து விட்ட பிழையை நினைத்து நினைத்து மனதிலே அதை திரைப்படமாக்கி வைக்காதீர்கள்! அப்படி செய்தால் திரும்பவும் அதே பிழையை செய்ய வாய்ப்புகள் ஏற்படும்.

6 உங்களது ஆளுமையையும் எண்ணங்களையும் புனரமைத் கொள்ளுங்கள் சரியான சிந்தனையும் சரியான செயற்பாடும் அவற்றில் இருந்து தோன்றும்.

7 உங்களது செயல் திறன் மிகச் சிறந்த நிலையில் இருக்க வேண்டுமாயின் செயல் திறனை பாதிக்கின்ற ஒழுங்குகள் (LEAK) நீக்கப்பட வேண்டும். பயம், தாழ்வு மனபான்மை என்பனவே செயல்திறனை பாதிக்கின்ற ஒழுங்குகள் ஆகும்.

8 உங்களுடைய மனம் புதுப்பெலன் அடைவதற்கு தினந்தோறும் வாசிக்கின்ற பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். வாழ்க்கையில் தோல்வி அடைந்து பின்னர் வெற்றி பெற்றவர்களின் வாழ்க்கை வரலாறுகள் இவ் வகையில் சிறந்த பலன் அளிப்பனவாக விளங்கும்.

9 ஒரு நிலையை அடைந்துவிட்டால் திருப்தி அடையாமல் அதனைவிட சிறப்பாக என்னசெய்லாம் எப்படிச் செய்யலாம் என்று ஆராய்ந்து பாருங்கள். வாழ்க்கையில் முன்னேற கற்க வேண்டியவை அதிகம், எல்லாவற்றையும் கற்று விட்டோம் என்று ஒருபோதும் எண்ணாதீர்கள்.

10 செயற்பாட்டில் இறங்குவதற்கு முன்னர் நான் நியாயமாக நடந்து கொள்கிறேனோ என்று அடிக்கடி கேட்டு கொள்ளுங்கள். நீங்கள் நியாயமாக நடந்தால் காரியம் நியாயமாகவே நடந்தேறும் என்று நினைத்துக் கொள்ளுங்கள்.

## பராமரிப்பு நிலைய விளையாட்டு போட்டி

31. 07, 99 அன்று அச்சுவேலி பகற் பராமரிப்பு நிலைய விளையாட்டுப் போட்டி அச்சுவேலி மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. இவ் விளையாட்டுப் போட்டி நிலையத்தின் முகாமையாளர் சகோ பி தேவராஜாவின் தலைமையில் நடைபெற்றது: இவ் விளையாட்டுப் போட்டிக்கு பிரதம விருந்தினராக மகாவித்தியாலய அதிபர் திருமதி ச கனகராஜா அவர்கள் அழைக்கப் பட்டார்கள். கௌரவ விருந்தினராக வண A K. சுரேந்திரன் கன்னியர் மடதின் அதிபர் அருட்சகோதரியும் அச்சுவேலி பகுதியில் இருக்கும் பாடசாலைகளில் ஆசிரியர்களும் கலந்து சிறப்பித்தார்கள்.

## Back in Square One

Now it is clear as crystal that the greatly watered down devolution package over which the much lamented Neelan Thiruchelvam and colleagues laboured for so many years is not going to be passed in Parliament. On Friday 14th August 1999 Mr. Ranil Wickremasinghe the esteemed leader of the Opposition categorically stated that his party was not going to vote for the proposals. He also said that the Government needed 113 votes to push this through the legisture, but the party in power has no means of mustering such support.

Mr. Wickremasinghe's reaction was not totally unexpected. During the past five years the U N P was steadly losing its enthusiam for the peace packege of the Government. Hopes of U N P's co-operation sprang up with Mr. Fox's mission soon after the general election.

The reason given by the leader of the Opposition was neither the L T T E nor the Sinhalese people were in favour of the devolution package. His statement more than anything else exposes the mood of the Sinhalese. Being a seasoned politician he knows the general feeling of the consituency. He will not do anything to jepoardize the prospects of the party in waiting. Surely nobody expects Mr Wickremasinghe to be a Sir Robert Peel or William Evarts Gladrstone. This is indeed the t r a g e d y of Government and politics in Sri-Lanka. Artful Politicians we had many but s'atesmen woe-fully nil.

The desision of the leader of the opposition foretells what is in store for the country and especially the Tamil Community

We are back in square one.

## Bishop V. S. Azariah 125th Birth Celebrations

Rt Rev. V S Azariah was the first Indian national to be consecrated as Bishop by the Anglican Church.

He was also one of the founder members of the Indian Missionary Society. On 16th August 1999 the Indian Missonary Society celebrated his 125th Birth Anniversary.

In the morning, Bishop Jason S. Dharmaraj declared opened the renovated ancestral house at Vellalenvillai. It was followed by the dedicatin of Bishop V S Azariah memorial Block in the IMS compound, Palayamkottai. Thanks giving Service took place in the eve ning at the Cathedral Palay-amkottai. At the public meeting a SouVenir was realeased. The Kodaikanal Publie chool Children gave a cultural programme and the celebrations came to an end with a play on Bishop V. S Azariah's life by I M S Youth wing, Nadu-vakkurichi.

## ASHRAM ...

When he was at Serampore he went to Tirupattur again to gather more information about the Ashram. After completing his Theological studies, he came back to Jaffna and served in the S. I. U. C. Churches for 8 1/2 years.

In 1939, he started the Asharm, sponsored by the Jaffna Christian Union. Though there was a good deal of opposition from the missionaries at that time, later they gave their consent to Selvaratnam's desirability of an Ashram, with the condition that this project should promote Church Union.

Christa Kula Ashram at Tirupattur decided to function without entering into the ecclesiastical structure but Selvaratnam's Ashram in Jaffna decided to be out side the ecclesiastical structure though closely related to the organized life of the churches.

Selvaratnam decided that Ashram should serve the churches, and the community at large. He stated that where there are cares to be borne, burdens to be lightened tears to be wiped, needs to be met, fears to be allayed and problems to be solved in this "Vale of Sorrows" the Ashram must try to step in and do the best. He worked toward this and his co workers Sevak I. T. Yesusakayam and Sevak Sam Alfred followed his foot steps.

Peri Annan spent 32 1/2 years in the Ashram. His intention was that the Ashram in Jaffna should be a religious community. by its life and example would radiate religion in the society. What he aimed at was a community of like minded p rsons following a certain pattern of life that would be a powerful religious influence.

Peri Annan placed himself fully in God's hands God used him to lead the Ashram Community ac d g to his w ll Peri An n introduced Christmas Bajan in 1946. This was held on Christmas Day evenings. Not only Christians, even Hindus were attracted by the Lyrics sung in Carnatic tunes - In 1952, he introduced Easter Bajan, on Eastar Day evenings. For a few years Easter Bajan was held at the Jaffna Esplanade. In 1952 whit-sun festival was held two days before whitsunday. This festival attracted many christians of different denominations - many eminent persons like Dr. Stanley Jones, Bro. D. G. Dhinakaran, Dr. Abdnl Haque were invited as main speakers at this festival.

A home for boys from distant places, was started, to help them to attend Secondary schools - all their expenses were met by the Ashram. A centre was established for the study of Religion and society (study - centre) atthe Ashram. in 1959. Rev S. K. Bunker was one of Directors Peri Annan and Sam Annan also served as Directors later.

To be continued

# THANKS

Service in rememberance of late

**Mrs Rose Parimalanayagam Atputharajah**

Late *Mrs. Rose Parimalanayagam Atputhrajah* had been prayerfully remembered on the 23rd of July 1999 at Mr & Mrs. C. A. Jesupalan's residence at Uduvil. We sincerely thank each and everyone for participating in the service and for Praying for the peace of her soul. We are also thankful for the prayers to console all her loved ones.

**MEMBERS of the FAMILY**


Registered as a News Paper at the G P. O. Sri Lanka-News Paper Printed for the Jaffna Diocese of the Church of South India at the American Ceylon Mission Press, Diocesan Complex Vaddukoddai on Friday the of 27th August 1999 published by Rev G. Nadaraja Diocesan office, Vaddukoddai.

## President now Student of Tamil

President of the Demoratic Socialist Republic of Sri Lanka Her Excellency Chandrika Kumaratunga has started learning Tamil. At the meeting of the Sri Lanka Freedom Party, Muslim Federation she had said that she was unable to speak in Tamil. These delegates had come from North East Province. She also said that she would address them in Tamil soon and that she had started studying Tamil under a qualified teacher. Her classes are conducted on Saturdays. Because of heavy work there is a delay in mastering the the language, she said.

## Animal Sacrifices resumed in Jaffna

Animal sacrifices (VELVI) have resumed in Jaffna after many years. These ceremonies are conducted in Vyravar and KALI temples.



## Remembering Rev. S R Hitchcock

Rev Sharmugam Ramalingham Hitchcock was born in Thenmaradchy in the year 1864

He studied Theology from Dr S muel Howland at Jaffna College and was ordained Minister in 1906.

He Served as Pastor at Usan, Chavakachcheri (twice) Atchuvely, Udupp ddy, (twice) Velanai and Navaly.

Rev Hitchcock w s noted for the homely languge in his sermons, a deep and unshaken faith in God's promises and a large hearted and impulsive generosity to colleagues and and subordinates and a fiery evangelistic zeal

The Morning Star of 8-12-1939 lamented

"It is a pity that the habit of autobiography is not common in our country. Otherwise, Rev S R Hitchcock's long and crowded experiecne would have proved invaluable to the Christian Church'

He died on the 5th December 1939 at Chavakachcheri. At the funeral Rev E K Yesuthasan preached on the verse "Mark the perfect man and behold the upright for the latter end of that man is peace".

## Churches Restored

The following C S. I. Churches were repaired and restored during the month of June 1999

| Church | Cost |
|---|---|
| Vaddukoddai - | Rs 59,652/= |
| Worker: Bro. S. Joshua | |
| Araly - | Rs 53,350/= |
| Worker: Mr A C Francis | |
| Karainagar - | Rs 52,880/= |
| Worker: Rev G. Nad rajah | |
| Erlalai North - | 217162/- |
| Worker Rev Solomon Milton | |

## OBITUARY

The death occurred on Sunday the 8th of August 1999 of Mrs. Mary Ezekiel at Batticaloa. The funaral took place on the 10th instant. She was the wife of late Peter Ezekiel, Teacher, and mother of Mr. Theva arulraj, Thevamanoranjan Pushpaganthani and Mr Benard Mahendran.